# கள்ளக்குறிச்சி நகராட்சி

கள்ளக்குறிச்சி நகராட்சியில் மன்ற கூட்டம் 2019 செப்டம்பர் மாதம் 20 ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு தனி அலுவலர் அவர்கள் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை:-** **திரு.** A.W.சையத் முஸ்தபா கமால், B.Sc.,
**தனி அலுவலர் / ஆணையாளர்**

**கூட்ட பொருள்கள்**

**பொருள் எண்-11**

கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையர் அவர்களின் ஆகஸ்ட் 2019 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பதிவு செய்யலாம்.

**பொருள் எண்-2**

கல்வராயன் மலையில் நடைபெற்ற கோடைவிழா–2019ல் கள்ளக்குறிச்சி நகராட்சி தொடர்பான விளம்பரம் கீழ்க்காணும் தினசரி நாளிதழ்களில் வெளிட்டமைக்கு வரப்பெற்ற பட்டியல் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வெளியிடப்பட்ட நாளிதழின் பெயர் | பட்டியல் விபரம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | தினத்தந்தி, கடலூர் | CDL 1920-0004362 Dt:13.07.19 (Incl.all tax) | 22260 |
| 2 | தமிழ்முரசு, புதுச்சேரி | 3300169961/13.07.19 | 12600 |
| 3 | தினகரன், புதுச்சேரி | 3300169113/13.07.19 | 19740 |
| 4 | நமது அம்மா, சென்னை | advt 0320/14.07.19 | 13125 |
| 5 | தினமணி | VPMTN90018619,13.07.19 | 16800 |
| 6 | தினமலர் | VPM40163,13.07.19 | 20160 |
| 7 | மாலை தமிழகம் | 1644 Dt.15.07.19 | 12600 |
| 8 | மக்கள் குரல் | 2196 Dt.13.07.19 | 9975 |
| 9 | மாலைமலர் | CUD D19070056 , 13.07.19 | 17220 |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற பட்டியல் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 3500 /இ1/2019 )**

**பொருள் எண்-3**

க0ள்ளக்குறிச்சி நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வரும் (1). திரு. வே. கோவிந்தராஜ், (2). திருமதி. கே. சித்ரா, (3). திரு. கே. கணேஷ், (4). திருமதி. பி. மகேஸ்வரி, (5). திரு. ஆ. குமரன், (6). திரு. எஸ். விஜயா பணியாளர்கள் 18.8.2000 முதல் வேலை வாய்ப்பகம் மூலம் பட்டியல் கோரப்பட்டு பணிவிதிகளின் படி துப்புரவு பணியாளர்களாக நியமனம் செய்யப்பட்டனர். இவர்களின் பணிநியமனம் குறித்து உள்ளாட்சி நிதி தணிக்கை துறையால் தணிக்கை உயர்வுகள் வழங்கப்படாலும் இதற்குண்டான நிலுவை ஊதியம் வழங்கப்படாமலும் இருந்தது.

தற்போது இவர்களது நியமனம் குறித்து எழுப்பப்பட்ட தணிக்கை தடைகளுக்கு உரிய

விளக்கங்கள் அளிக்கப்பட்டு தணிக்கை தடைகள் அனைத்தும் நீக்கம் செய்யப்பட்டுவிட்டது. மேற்காணும் துப்புரவு பணியாளர்களுக்கு 18.08.2000 ஆம் தேதி முதல் துவக்க ஊதியம் மட்டுமே வழங்கப்பட்டு வரப்படுகிறது. மேற்கண்ட பணியாளர்கள் அனைவரும் நாளதுவரை தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் 01.07.2001 முதல் 01.07.2019 வரை வழங்கப்பட வேண்டிய காலமுறை ஊதிய உயர்வுகளை அனுமதித்து கீழ்கண்டுள்ள விபரப்படி நிலுவை ஊதியம் ரூ. 50,44,656 (ஐம்பது லட்சத்து நாற்பத்தி நான்காயிரத்து அறுநூற்று ஐம்பத்து ஆறு மட்டும்) நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | துப்புரவு பணியாளர் பெயர் | நிலுவை ஊதிய காலம் | வழங்க அனுமதிப்படும் நிலுவை ஊதியம் ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு. வே. கோவிந்தராஜ், | 01.07.2001 – 31.08.2019 | 840776 |
| 2. | திருமதி. கே. சித்ரா, | 01.07.2001 – 31.08.2019 | 840776 |
| 3. | திரு. கே. கணேஷ், | 01.07.2001 – 31.08.2019 | 840776 |
| 4. | திருமதி. பி. மகேஸ்வரி, | 01.07.2001 – 31.08.2019 | 840776 |
| 5. | திரு. ஆ. குமரன், | 01.07.2001 – 31.08.2019 | 840776 |
| 6. | திருமதி. எஸ். விஜயா | 01.07.2001 – 31.08.2019 | 840776 |
| | | **மொத்தம்** | **5044656** |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 2154 /2019/சி1 )**

## <u>பொருள் எண்-4</u>

அனைத்து நகராட்சி பகுதிகளிலும், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு மற்றும் குடிநீர் சிக்கனத்தின் அவசியத்தினை விளக்கும், விழிப்புணர்வு துண்டு பிரசுரம் மற்றும் ஸ்டிக்கர்கள் அனைத்து கட்டடங்களிலும் பிரசுரம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் ஆய்வு கூட்டங்களில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் உள்ள கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு அவசியம் மற்றும் குடிநீர் சிக்கனத்தின் அவசியம் குறித்து துண்டு பிரசுரங்கள் மல்டிகலரில் (ஸ்டிக்கர் மற்றும் பிரசுரம்) அச்சிட்டு வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2,50,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணியின் அவசர அவசியத்தினை கருதி, தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று, விலைப்புள்ளிகள் பெற்று பணியினை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 936/2019/இ1 )**

## <u>பொருள் எண்-5</u>

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் (SBM), திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–2019ன் கீழ், கள்ளக்குறிச்சி நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு Battery Operated Vehicle சப்ளை செய்யும் பணி மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரத்தினை மாவட்ட அளவில் ஒரு தமிழ் தினசரி நாளிதழ் (*District Editione*)–ல் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை

அவர்களின் மூலமாக பிரசுரம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ.2835/—ஐ வழங்கக் கோரி M/s.கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தாரின் பட்டியல் எண்.2981 நாள். 11.09.2018—ல் பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி பட்டியல் தொகையினை M/s.கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்லாம்.

**( ந.க.எண். 2220/2018 / இ1 )**

**<u>பொருள் எண்-6</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் (SBM), திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–2019ன் கீழ், Bio Mining முறையில் குப்பைகளை பிரித்தெடுக்கும் பணிகள் மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரத்தினை தமிழ்நாடு மாநில அளவில் ஒரு தமிழ் தினசரி நாளிதல் (All Editions in the State) மற்றும் ஒரு ஆங்கில தினசரி நாளிதழ் (All Editions in the state)-ல் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை அவர்களின் மூலமாக பிரசுரம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ.59,892/—ஐ வழங்கக் கோரி M/s.கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தாரின் பட்டியல் எண்.2974 நாள்.07.09.2018—ல் பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி பட்டியல் தொகையினை M/s.கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்லாம்.

**( ந.க.எண். 2220/2018 / இ1 )**

**<u>பொருள் எண்-7</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு, மழைநீர் சேகரிப்பு மற்றும் குடிநீர் சிக்கனம் குறித்து விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு, 17.09.2019 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கம் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு மழைநீர் சேகரிப்பு மற்றும் குடிநீர் சிக்கனம் கறித்த விழிப்புணர்வு பிரசுரங்கள் கொள்முதல் செய்தல். | M/s.ARUMBAKKAM STATIONARIES & PRINTING SERVICE INDUSTRIAL CO-OPERATIVE SOCIETY LTD., CHENNAI. | குறைவான விலைப்புள்ளி |
| | | M/s.TIRUNELVELI DISTRICT MULTI PURPOSE SERVICE INDUSTRIAL CO-OPERATIVE SOCIETY LTD., Tirunelveli.. | அதிகமான விலைப்புள்ளி |
| | | M/s. SALEM STATIONARIES & PRINTING SERVICE INDUSTRIAL CO-OPERATIVE SOCIETY LTD., SALEM. | அதிகமான விலைப்புள்ளி |

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் விலைப்புள்ளிகளில், குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s.ARUMBAKKAM

STATIONARIES & PRINTING SERVICE INDUSTRIAL CO-OPERATIVE SOCIETY LTD., CHENNAI என்ற நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

3. பணியின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்936/2018/இ1)**

## பொருள் எண்-8

அரசாணை (நிலை) எண். 154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் எம்.ஏ.5, துறை நாள். 09.08.2010ன்படி இந்நகராட்சி முதல் நிலை நகராட்சி என்பதால் இந்நகராட்சி பொறியியல் பொறியியல் பிரிவில் 5 பணியிடங்கள் மட்டுமே உள்ளது. அதன் விபரம்

1. நகராட்சி பொறியாளர் -- 1 எண்ணிக்கை
2. பணி மேற்பார்வையாளர் -- 1 எண்ணிக்கை
3. நீர்த்தேக்க தொட்டி காவலர் -- 1 எண்ணிக்கை
4. பணி ஆய்வாளர் -- 1 எண்ணிக்கை
5. குழாய் ஆய்வாளர் -- 1 எண்ணிக்கை

மேலும் இந்நகராட்சியில் தெருமின் விளக்குகள் குடிநீர் உபகரணங்கள் ஆகிய பணிகள் மேற்கொள்ளவும் பணியிடங்கள் ஏதும் தோற்றுக்கப்படாததால் இந்நகராட்சியில் கீழ்க்கண்டவாறு தெருமின் விளக்குகள் மற்றும் குடிநீர் பராமரிப்பு பணிகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

1. தெருமின் விளக்குகள்

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தெருமின் விளக்குகள் | 1167 |
| 2. | சோடியம் ஆவி விளக்குகள் | 459 |
| 3. | சி.எப்.எல். | 154 |
| 4. | உயர்மின் கோபுர விளக்கு | 5 |
| **மொத்தம்** | | **1785** |

2. குடிநீர் பராமரிப்பு பணிகள் விவரம்

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | குடிநீர் இணைப்புகள் | 6790 இணைப்புகள் |
| 2. | பைப்லைன் அமைக்கப்பட்டது | 65.60(கி.மீ) |
| 3. | கேட் வால்வு திறப்பான் | 200 எண்ணிக்கை |
| 4. | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி | 6(30.00 இலட்சம் கொள்ளளவு) |
| 5. | மினிபவர் பம்பு 2000 லிட்டர் கொள்ளளவு | 283 எண்ணிக்கை |
| 6. | கைப்பம்பு | 15 எண்ணிக்கை |

மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சியில் பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கப்படாததால் மாவட்ட ஆட்சியர் தரப்படுத்தப்பட்ட விலைவிகிதத்தில் 20 பணியாளர்கள் நியமனம் செய்து கொள்ளவும் தினக்கூலி விகிதத்தில் ரூ.353/– வீதத்தில் 20 பணியாளர்களுக்கு ஏற்கனவே மன்ற தீர்மானம் எண்.42, நாள் 28.06.2019ல் 30.09.2019 வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது 01.10.2019 முதல் 31.03.2020 முடிய 6 மாதங்களுக்கு ரூ.13.00/–லட்சத்திற்கு மட்டும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஆண்கள் சுய உதவிக்குழுக்கள் வழியே 20 நபர்களை நியமனம் செய்து மாவட்ட ஆட்சித்

தலைவர், விழுப்புரம் அவர்களின் விலை விகிதத்தில் ஊதியம் வழங்கவும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 3445/2019/இ1)

## பொருள் எண்-9

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு எண் TN32AV2277 க்கு வாகன காப்பீடு செலுத்த (பாலிசி எண்.2805023118P107786211) யுனைட்டெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட் என்ற நிறுவனத்திடமிருந்து ரூ.14,583/– செலுத்த கோரி யுனைட்டெட் இந்தியா இன்சூரன்ஸ் லிட், சேலம் மெயின்ரோடு, கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்திடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி வாகனத்திற்கான வாகன காப்பீடு தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற வாகனகாப்பீடுக்கான பட்டியல் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகையினை வழங்கவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 4421 /இ1 /2019)

## பொருள் எண்-10

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும், குடிநீர் தட்டுப்பாடு காரணமாக குடிநீர் வழங்குவதில் ஏற்படும் சிரமங்களை தவிர்க்கும் பொருட்டும், ஏற்கனவே உள்ள கைப்பம்புகள் / மின் மோட்டார்கள் பல இடங்களில் பழுது ஏற்பட்டு இயங்காமல் இருக்கும் பட்சத்தில், அதனை இயங்குவதற்கு தேவையான அனைத்து குடிநீர் உபகரணங்களையும் இருப்பு வைத்துக்கொள்ளவும், மாவட்ட கொள்முதல் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான “M/S.FLOWIN INDUSTRIES, Erode” என்ற நிறுவனத்தாரிடம், மாவட்ட கொள்முதல் குழு / குடிநீர் வடிகால் வாரிய விலையில் நேரடியாக குடிநீர் விநியோக உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ள திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விழுப்புரம் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.ஆ8/973/2019, நாள்:14.09.2019–ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
மேற்படி சுற்றறிக்கைக்கிணங்க, இந்நகராட்சியில் தற்போது குடிநீர் தங்கு தடையின்றி வழங்குவதற்கும், நகரில் பழுதடைந்துள்ள மின் மோட்டார்களையும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கும், தற்போது குடிநீர் விநியோக உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.9,90,000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்)க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மாவட்ட கொள்முதல் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட “M/S.FLOWIN INDUSTRIES, Erode” என்ற நிறுவனத்தாருக்கு நேரடியாக உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. குடிநீர் விநியோக பணியின் அவசர, அவசியத்தினை கருதி, தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
4. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4395/2019/இ1)**

## பொருள் எண்-11

திரு.இராமநாதன் என்பவர் சர்வே எண்.457ல் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்றவில்லை என மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு C.P.No.202/2019 வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு இந்நகராட்சி சார்பாக திரு.எம்.ஏழுமலை அரசு வழக்கறிஞர் என்பவர் ஆஜராகியுள்ளார். மேற்படி வழக்கிற்கு வழக்கு கட்டணம் ரூ.15,000/–ஐ வழங்ககோரி கடிதம் அனுப்பியுள்ளார். மேற்படி கடிதம் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகை ரூ.15,000/–ஐ மன்றத்தின் முன் அனுமதி பெற்று நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.எப்1/4371/2018)**

## பொருள் எண்-12

திரு.சிதம்பரம்பூசாலி என்பவர் சர்வே எண்.293/6ல் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்றவில்லை என மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு C.P.No.552/2017 வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு இந்நகராட்சி சார்பாக திரு.எம்.ஏழுமலை அரசு வழக்கறிஞர் என்பவர் ஆஜராகியுள்ளார். மேற்படி வழக்கிற்கு வழக்கு கட்டணம் ரூ.15,000/–ஐ வழங்ககோரி கடிதம் அனுப்பியுள்ளார். மேற்படி கடிதம் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகை ரூ.15,000/–ஐ மன்றத்தின் முன் அனுமதி பெற்று நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.எப்1/1541/2016)**

## பொருள் எண்-13

கள்ளக்குறிச்சி நகராட்சியில் ஆண்டு உரிம இனங்களுக்கு **11.07.2019** அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி குறித்த அறிவிப்பினை **25.06.2019**ம் தேதிய தினக்குரல் நாளிதழில் வெளியிட்டமைக்கு வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.35,520/– (ரசீது எண்.298/24.06.2019)–யினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற பட்டியல் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3639/2019/அ2)**

## பொருள் எண்-14

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP) 2019-2020ன் கீழ், சாலைப்பணிகள் மேற்கொள்வதற்கான கருத்துருவினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கும் பொருட்டு, கீழ்க்காணும் சாலைப்பணிகள் சிப்பங்கள் வாரியாக மொத்தம் ரூ. 538.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | சிப்பம் எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | I | எம்.ஜி.ஆர். நகர் கிருஷ்ணாநகர், கருணாபுரம் முதல் ஜெயின் ஜோசப் பள்ளி செல்லும் சாலை, நாகப்பிள்ளை நகர் மற்றும் விநாயகா நகர் குறுக்கு தெரு மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்சாலைகள் அமைத்தல் (வார்டு எண். 02, 09 & 10) | 200.00 |
| 2. | II | மிளகாய் தோட்டம் சாலை, கிருஷ்ணாநகர் சாலை, மகாலட்சுமி நகர், கே.ஏ.ஜி. நகர் 3-வது தெரு மற்றும் விஜியலட்சுமி நகர் குறுக்கு தெருக்கள் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்சாலைகள் அமைத்தல் (வார்டு எண். 01, 10 & 15) | 200.00 |
| 3. | III | தீப்பெட்டி தொழிற்சாலை குறுக்கு தெரு, கவரைத் தெரு, கிராமச்சாவடி தெரு, விளாந்தாங்கல் பிரதான சாலை மற்றும் விளாந்தாங்கல் குறுக்குத் தெரு மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்சாலை அமைத்தல் (வார்டு எண். 01, 16, 19 & 21) | 138.00 |
| **மொத்தம்** | | | **538.00** |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP) 2019-2020ன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகையினை முழு மான்யமாக வழங்கிட கோரியும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. திட்டப் பணியின் அவசர, அவசியத்தினை கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்னனுமதி பெற்று கருத்துரு தயார் செய்து அனுப்பியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**( ந.க.எண். 4228 / 2019 / இ1 )**

## <u>பொருள் எண்-15</u>

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 27 சமுதாய கழிப்பிடங்கள் பயன்பாட்டில் உள்ளது. தற்போது சமுதாய கழிவறைகளில் செப்டிங்டேங்க் நிரம்பும் நிலையில் உள்ளது. செப்டிக் டேங்க் நிரம்பி வெளியேறுவதை தடுக்கவும் பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படாமல் தடுக்கவும், மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் நிரம்பும் கழிவறைகளின் செப்டிக் டேங்கினை சுத்தம் செய்யும் பொருட்டு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவரின் முன்னனுமதி பெற்று உள்ளூர் செயல்படும் செப்டிக் டேங்க் சுத்தம் செய்யும் வாகன நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதையும் , வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் நிறுவனத்திற்கு பணிஉத்தரவு வழங்கவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேற்காணும் பணிக்கு ஆகும் பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4122 / 2019 /எச்1)**

## பொருள் எண்-16

சென்னை உயர்நீதிமன்றத்தில் திரு.என்.எஸ்.சுப்பரமணியன் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு எண்.3455/2018 ல் நகராட்சி குப்பைகளை கொட்டுவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவரால் வழங்கப்பட்ட சிறுவத்தூர் கிராமத்தில் சர்வே எண்.401ல் உள்ள கல்லாங்குத்து இடத்தில் மேற்கண்ட குப்பைகளை கொட்டாமல் நகராட்சிக்கு சொந்தமான துருகம் சாலையில் உள்ள மக்கு உரக்கிடங்கில் குப்பை கொட்டப்பட்டு வருவதை எதிர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். எனவே, இவ்வழக்கிற்கு எதிர்வாதுரை தாக்கல் செய்ய வழக்கு கட்டணமாக ரூ.15000/- யை திரு.பி.சீனிவாஸ் அரசு வழக்கறிஞர் கோரியுள்ளார்.எனவே,பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்னனுமதி பெற்று தொகை ரூ.15000/- யை திரு.பி.சீனிவாஸ் வழக்கறிஞருக்கு தொகையை வழங்கியதை மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவரின் முன்னனுமதி பெற்று திரு. திரு.பி.சீனிவாஸ் வழக்கறிஞருக்கு தொகையை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பட்டியல் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 345 / 2018 /எச்1)**

## பொருள் எண்-17

பணியாளர் இழப்பீடு ஆணையர் மன்றம் /தொழிலாளர் இணை ஆணையர் வேலூர் அவர்களின் உத்தரவு எண் ப.இ.வ.எண்.33/2017 நாள்:-16.08.2019 உத்தரவில் திருமதி. முத்துவேல் க/பெ சண்முகம் என்பவர் கடந்த 29.01.2017ல் சாலை விபத்தில் இறந்ததற்கு இழப்பீடு வழங்ககோரி உத்தரவு வரப்பெற்றுள்ளது.இவ்உத்தரவிற்கு மேல்முறையீடு செய்ய வேலூர் தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்தில் கடந்த 09.09.2019 அன்று எதிர்வாதுரை தாக்கல் செய்யதற்கு வழக்கு கட்டணம் ரூ.5000/-திரு.கே.தமிழரசன் அரசு வழக்கறிஞர் கோரியுள்ளார்.பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்னனுமதி பெற்று தொகை ரூ.5000/- திரு.கே.தமிழரசன் வழக்கறிஞருக்கு வழங்கியதை மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவரின் முன்னனுமதி பெற்று திரு.கே.தமிழரசன் வழக்கறிஞருக்கு தொகையை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பட்டியல் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1577 / 2017 /எச்1)**

## பொருள் எண்-18

**வேலையின் பெயர்:-** கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 27 சமுதாய கழிப்பிடங்கள் பயன்பாட்டில் உள்ளது. தற்போது சமுதாய கழிவறைகளில் செப்டிங்டேங்க் நிரம்பும் நிலையில் உள்ளதால் அதனை சுத்தம் செய்யும் பணிக்கு பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்னுனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளிகள் 20.09.2019 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விபரம் | **திரு.சௌகர் சையத் அமீர்பாஷா, A.A.A.பாஷா செப்டிங் டேங்க் கிளினிங், கள்ளக்குறிச்சி** | ஸ்ரீமுருகன் செப்டிங டேஙக் கிளினிங, கள்ளக்குறிச்சி | அஸ்ரப் செப்டிங டேஙக் கிளினிங, கள்ளக்குறிச்சி |
|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 27 சமுதாய கழிப்பிடங்கள் பயன்பாட்டில் உள்ளது. தற்போது சமுதாய கழிவறைகளில் செப்டிங் டேங்க் நிரம்பும் நிலையில் உள்ளதால் அதனை சுத்தம் செய்யும் பணிக்கு (ஆட்கள் கூலி, டீசல் செலவு உள்பட) | **1000.00** | 1100.00 | 1200.00 |

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. **திரு.சௌகர் சையத் அமீர்பாஷா, A.A.A.பாஷா செப்டிங் டேங்க் கிளினிங், கள்ளக்குறிச்சி** என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணிஉத்தரவு வழஙகவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3.இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4122 /2019/எச்1)**

## பொருள் எண்-19

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பொதுமக்களிடமிருந்து அவ்வப்போது வரப்பெற்ற அலைபேசி புகாரில் நகர பகுதியில் தெரு நாய்களினால் தொல்லை அதிகரிக்கப்பதாகவும் பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுவதாகவும் புகார் வந்ததையொட்டி நகராட்சி ஆணையர் நேரடி அறிவுரையின் படி துப்புரவு மேற்பார்வையாளரால் வார்டு எண்.01 முதல் 21 வார்டுகளில் தெருக்களில் சுற்றித்திரியும் தெருநாய்களை கணக்கெடுக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில் வார்டு எண் 01 முதல் 21 வரை மொத்தம் தெருக்களில் சுற்றித்திரியும் நாய்கள் எண்ணிக்கை 829 என தெரிவிக்கப்பட்டுள்ளது.எனவே, அரசாணைக்குட்பட்டு பொதுமக்களின் நலன் கருதி இந்நகர பகுதியில் உரிய தெருக்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டு வெறிநாய்களுக்கு தடுப்பூசி போடும் பணிக்கு உடனடியாக மேற்கொள்ளவும் இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.6.00 லட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவலரின் முன்னனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

3. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4120 /2019 /எச்1)**